AHMADI TAMIL CHURCH
ST.PAUL'S CHURCH KUWAIT
அஹமதி தமிழ் திருச்சபை
PREPARE TO MEET GOD

## பரிசுத்த பவுல் ஆலயம், குவைத்

# அஹமதி தமிழ் திருச்சபை

# "தேடுங்கள், அப்பொழுது கண்டடைவீர்கள்..."

மத்தேயு 7:7

செய்தி மலர்
2024
பிப்ரவரி

இதழ் : 10
மலர் : 20



## சபை ஊழியரின் அன்பு மடல்



# தேடுங்கள்

கிறிஸ்துவுக்குள் அன்பான சகோதர சகோதரிகளே, ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் உங்களுக்கு வாழ்த்துக்களையும் ஆசீர்வாதங்களையும் கூறிக்கொள்ளுகிறேன்.

வரும் பிப்ரவரி மாதம் 14-ம் தேதி சாம்பல் புதன் கிழமையை அனுசரிக்க இருக்கிறோம். அதற்கு பின் வருகிற 40-நாட்கள் லெந்து காலம் என்று அழைக்கப்படுகிறது. ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து இந்த உலகத்தில் தன்னுடைய ஊழியத்தை ஆரம்பித்து 40 நாட்கள் கடும் உபவாசமிருந்தார். அதை நினைவு கூறும் வகையில் நாமும் இந்த நாட்களை ஜெபங்களிலும் உபவாசங்களிலும் செலவிட இருக்கிறோம்.

ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து கூறினார் "முதலாவது தேவனுடைய இராஜ்ஜியத்தையும் அவருடைய நீதியையும் தேடுங்கள் அப்பொழுது இவைகளெல்லாம் (உணவு, உடை, இருப்பிடம்) கூட கொடுக்கப்படும்" என்று (மத்-6:33)

ஆம் பிரியமானவர்களே, இந்த லெந்து காலங்களிலே அதிகமதிகமாய் தேவ ராஜ்ஜியத்தைக் குறித்து சிந்தித்து, வேத வசனங்களை தியானித்து, ஜெபித்து, பரிசுத்த வாழ்க்கை வாழ்ந்து ஆவிக்குரிய வாழ்வில் வளர்ச்சியடைய நம் ஆவி ஆத்துமா சரீரத்தை ஆண்டவருக்கு காணிக்கையாக அர்ப்பணிப்போம்.

## 1. உணவு தருகிறார்...

மனுஷன் அப்பத்தினாலே மாத்திரமல்ல தேவனுடைய வாயிலிருந்து புறப்படுகிற ஒவ்வொரு வார்த்தையினாலும் பிழைப்பான். (மத்-4:4)

தேவனுடைய வார்த்தைகள் நமக்கு உணவாக இருக்கிறது அதனாலே நாம் திருப்தியடைகிறோம். இது நம்முடைய ஆவிக்குரிய வாழ்க்கையை செழிப்பாக்குகிறது. ஆகவே அதிகமதிகமாய் வேத வசனங்களை தியானித்து அவைகளை நம் வாழ்க்கையில் கடைபிடிக்கின்ற பொழுது "கர்த்தருடைய வேதம் குறைவற்றதும், ஆத்துமாவை உயிர்ப்பிக்கிறதுமாயிருக்கிறது. கர்த்தருடைய சாட்சி பேதையை ஞானியாக்குகிறதுமாயிருக்கிறது. கர்த்தருடைய நியாயங்கள் செம்மையும், இருதயத்தை சந்தோஷிப்பிக்கிறதுமாயிருக்கிறது. கர்த்தருடைய கற்பனை தூய்மையும், கண்களை தெளிவிக்கிறதுமாயிருக்கிறது. கர்த்தருக்கு பயப்படுகிற பயம் சுத்தமும் என்றைக்கும் நிலைக்கிறதுமாயிருக்கிறது. கர்த்தருடைய நியாயங்கள் உண்மையும் அவைகள் அனைத்தும் நீதியுமாயிருக்கிறது. அவைகள் பொன்னிலும், மிகுந்த பசும்பொன்னிலும் விரும்ப படத்தக்கதும் தேனிலும், தேன் கூட்டிலிருந்து ஒழுகும் தெளிதேனிலும் மதுரமுள்ளதுமாயிருக்கிறது. அன்றியும் அவைகளால் உமது அடியேன் எச்சரிக்கப்படுகிறேன். அவைகளை கைக்கொள்ளுகிறதினால் மிகுந்த பலனுண்டு." (சங்கீ-19:7-11)

இப்படி கர்த்தர் தம்முடைய பிள்ளைகளை வேத வசனங்களால் போஷிக்கிறார் அப்படிப்பட்ட தேவன் உலகப்பிரகாரமான போஜனத்தை தம்முடைய பிள்ளைகளுக்கு கொடுக்காமலிருப்பாரா? இயேசு தாம் ஊழியம் செய்த நாட்களில் திரளான ஜனங்களுக்கு போதனை செய்த பிறகு அவர்கள் பசியோடு இருப்பார்கள் என்று அறிந்து இரண்டு முறை அவர்களுக்கு அதிசயிக்கதக்கவிதமாய் அப்பத்தையும் மீனையும் அபரிவிதமாய் வர்த்திக்கப் பண்ணி போஷித்தார். அதே தேவன் உங்களுக்கும் அப்பமும், தண்ணீரும் குறையாமல் தந்து போஷித்து வழி நடத்துவார்.

"நீங்கள் சம்பூர்ணமாய் சாப்பிட்டு திருப்தியடைந்து உங்களை அதிசயமாய் நடத்தி வந்த உங்கள் தேவனாகிய கர்த்தருடைய நாமத்தை துதிப்பீர்கள். என் ஜனங்கள் ஒரு போதும் வெட்கப்பட்டுப் போவதில்லை. உங்களுக்கு முன்மாரியையும், பின்மாரியையும் ஏற்கனவே வருஷிக்கப்பண்ணுவார். களங்கள் தானியத்தினால் நிரம்பும். ஆலைகளில் திராட்ச இரசமும் எண்ணையும் வழிந்தோடும்" (யோவே-2:23-26)

## 2. உடை தருவார்...

ஒரு தகப்பனுக்கு இரண்டு குமாரர்கள் இருந்தார்கள் அதில் இளைய குமாரன் தகப்பனிடமிருந்து சொத்துக்களை பிரித்து கொண்டுபோய் ஊதாரியாய் செலவிட்டு அழித்துப் போட்டான். அதன் பிறகு தன் தகப்பனுடைய அன்பை உணர்ந்து அவனைப் பார்க்க வந்தான். அப்பொழுது தகப்பன் அவன் மனந்திரும்பியதை பார்த்து அவனை ஏற்றுக்கொண்டு உயர்ந்த வஸ்திரத்தை

அவனுக்கு உடுத்தி அவன் கைக்கு மோதிரத்தையும், அவன் கால்களுக்கு பாதரட்சையும் அணிவித்தான்.

மேற்சொன்ன இந்த சம்பவத்தை இயேசு கிறிஸ்து கூறினார். இதன் அர்த்தம் என்னவென்றால் மனந்திருந்தின அந்த மைந்தனுக்கு தகப்பன் இரட்சிப்பின் வஸ்திரத்தை உடுத்தினான். அவனுக்கு அதிகாரங்களை அளித்தான். பரிசுத்த பாதையில் தொடர்ந்து நடப்பதற்கு பாதரட்சைகளை தொடுத்தான் என்ற பொருள் படும். ஆம் பிரியமானவர்களே, கர்த்தர் தம் பிள்ளைகளுக்கு இரட்சிப்பின் வஸ்திரத்தை உடுத்தி அழகு பார்க்கிறார். இப்படிப்பட்ட தேவன் நமக்கு உலகப்பிரகாரமான வஸ்திரத்தையும் உடுத்துவிப்பது அதிக நிச்சயமல்லவா? " உங்கள் தேவனாகிய கர்த்தர் தேவாதி தேவனும் கர்த்தாதி கர்த்தரும் மகத்துவமும் வல்லமையும் பயங்கரமுமான தேவனுமாயிருக்கிறார். அவர் பட்ச பாதகம் பண்ணுகிறவருமல்ல, பரிதானம் வாங்குகிறவருமல்ல அவர் திக்கற்ற பிள்ளைக்கும் விதவைக்கும் நியாயம் செய்கிறவரும் அன்னியன் மேல் அன்பு வைத்து அவனுக்கு அன்ன வஸ்திரம் கொடுக்கிறவருமாயிருக்கிறார்" (உபா-10:17,18) வெளிப்படுத்தின விசேஷத்தில் ஐந்தாம் முத்திரையை உடைத்தபோது ஆண்டவருக்காக தம் ஜீவனை அர்ப்பணித்தவர்கள் அனைவருக்கும் வெள்ளை அங்கிகள் கொடுக்கப்பட்டது. (வெளி-6:15)

இன்றைக்கும் தனது பரிசுத்த இரத்தத்தால் கழுவப்பட்டு ஆண்டவருக்கு தன் வாழ்க்கையை அர்ப்பணித்தவர்களுக்கு ஆவிக்குரிய இரட்சிப்பின் வஸ்திரத்தையும் அதோடு கூட உலகப்பிரகாரமான வஸ்திரங்களையும் கொடுத்து கர்த்தர் ஆசீர்வதிக்கிறார். அவர் சிலுவையில் தொங்கின போது அவருடைய வஸ்திரத்தை எல்லோரும் பங்கு போட்டுக்கொண்டார்கள். ஐசுவரிய சம்பன்னராகிய இயேசு கிறிஸ்து நமக்காக தன் வஸ்திரத்தையும் இழந்து தரித்திரரானார். இதுதான் இயேசுவின் அன்பு. அவருக்கு நம்முடைய வாழ்க்கையை அர்ப்பணிப்போம்.

## 3. வீடு வாசல் தருகிறார்...

தீர்க்கதரிசியாகிய தாவீதுக்கு கர்த்தர் நிலையான வீட்டைக் கட்டினார். "இப்போதும் உமது அடியானுடைய வீடு என்றைக்கும் உமக்கு முன்பாக இருக்கும்படி அதை ஆசீர்வதித்தருளும். கர்த்தராகிய ஆண்டவராகிய தேவரீர் அதை சொன்னீர். உம்முடைய ஆசீர்வாதத்தினாலே உமது அடியானின் வீடு என்றைக்கும் ஆசீர்வதிக்கப்பட்டிருப்பதாக" என்றான். (2-சாமு-7:29) இன்று வரைக்கும் இஸ்ரவேல் தேசத்திலே தாவீதின் சிங்காசனம் நிலைபெற்றிருக்கிறது. இஸ்ரவேல் தேசத்தின் தேசியக்கொடியில் ஒரு நட்சத்திரம் காணப்படுகிறது. அது தாவீதின நட்சத்திரம் என்று சொல்லப்படுகிறது. ஆண்டவர் சொன்ன வாக்கு இன்றும்

நிறைவேறியிருக்கிறது. அதே ஆசீர்வாதத்தை தம்மை நம்பியுள்ள பிள்ளைகளுக்கும் அவர் கொடுக்கிறார். அதுமட்டுமல்ல நிலையான வீட்டை பரலோக ராஜ்ஜியத்தில் நமக்காக உருவாக்கி வைத்திருக்கிறார். "நித்திய ஜீவனை அளிப்பேன் என்பதே அவர் நமக்கு செய்த வாக்குத்தத்தம் (1-யோவா-2:25).

பரலோகத்தில் நித்திய வீட்டை நமக்கு கொடுக்க ஆயத்தமாய் இருக்கிற கர்த்தர் இந்த உலகத்திலும் நிலையான வீட்டை நமக்கு நிச்சயம் தருவார். " தேவன் தனிமையானவர்களுக்கு வீடு வாசல் ஏற்படுத்தி கட்டுண்டவர்களை விடுதலையாக்குகிறார். (சங்கீ-68:6) செம்மையானவர்களின் வம்சம் ஆசீர்வதிக்கப்படும். ஆஸ்தியும், ஐசுவரியமும் அவன் வீட்டிலிருக்கும் அவனுடைய நீதி என்றைக்கும் நிற்கும். (சங்கீ-112:1-3) " கர்த்தர் வீட்டைக் கட்டாராகில் அது கட்டுகிறவர்களின் பிரயாசம் விருதா. கர்த்தர் நகரத்தை காவாராகில் காவலாளர் விழித்திருக்கிறது விருதா. (சங்கீ-127:1)

" உன் அலங்கத்திற்குள்ளே சமாதானமும் உன் அரமனைக்குள்ளே சுகமும் இருப்பதாக" (சங்கீ-122:7) "மலடியைச் சந்தோஷமான பிள்ளைத் தாய்ச்சியாக்கி வீட்டிலே குடியிருக்கப்பண்ணுகிறார்" (சங்கீ-113:9) இப்படி கர்த்தர் உலகப்பிரகாரமான வீட்டையும் கட்டி குழந்தைப் பாக்கியத்தையும் கொடுத்து அப்பமும், தண்ணீரும் குறையாதிருக்கும்படியான அருளை ஆண்டவர் தன்னுடைய பிள்ளைகளுக்கு கொடுக்கிறார்.

மேற்சொன்ன ஆசீர்வாதங்கள் அனைத்தும் நாம் முதலாவது தேவனுடைய ராஜ்ஜியத்தையும் அவர் நீதியையும் தேடும்போது இலவசமாக கொடுக்கப்படுகிறது.
கர்த்தர் தாமே ஒவ்வொருவரையும் ஆசீர்வதித்து பிப்ரவரி மாதம் முழுவதும் ஜெப வாழ்க்கையில் நிலைத்திருக்க அருள் புரிவாராக.

கர்த்தருடைய கிருபை உங்கள் அனைவரையும் தாங்குவதாக.

<u>இப்படிக்கு</u>

கர்த்தரின் பணியில்
உங்கள் அன்பு சகோதரன்
S.ஸ்டாலின்

# வைராக்கியம் கொண்ட தேவ மனிதர்கள்

**வாசிப்போம் எண்-25:11 நான் என் எரிச்சலில் இஸ்ரவேல் புத்தரரை நிர்மூலமாக்கதபடிக்கு ஆசாரியனாகிய ஆரோனின் குமாரனான எலெயாசாரின் மகன் பினகாஸ் என் நிமித்தம் பக்தி வைராக்கியம் காண்பித்ததினால் இஸ்ரவேல் புத்திரர் மேல் உண்டான என் உக்கிரத்தை திருப்பினான்.**

**a.இன்றைக்கு நம்முடைய வைராக்கியம் எப்படிபட்டதாய் இருக்கிறது என்பதை நாம் சிந்தித்து பார்க்க வேண்டும்.**

**b.சிலர் அநீதிக்காக வைராக்கியம் கொள்கிறார்கள் ஆனால் நம்முடைய வைராக்கியமோ நீதிக்காக இருக்க வேண்டும்.**

**c.எல்லாவற்றையும் விட நாம் தேவனுக்காக பக்தி வைராக்கியம் கொண்டவர்களாக இருக்க வேண்டும்.**

## நீதிக்காக வைராக்கியம் கொள்வது

**கலாத்-4:18 நல்ல விஷயத்தில் வைராக்கியம் பராட்டுவது நல்லதுதான். அதை நான் உங்களிடத்தில் இருக்கும்போது மாத்திரமல்ல எப்பொழுதும் பாராட்ட வேண்டும்.**

**நல்ல விஷயம் என்றால் என்ன?**

**தேவனுக்காக வைராக்கியமாக இருப்பது. சங்கீ-11:7 கர்த்தர் நீதியுள்ளவர் நீதியின் மேல் பிரியப்படுவார். அவருடைய முகம் செம்மையானவனை நோக்கியிருக்கிறது. மத்-5:6 நீதியின் மேல் பசிதாகமுள்ளவர்கள் பாக்கியவான்கள் அவர்கள் திருப்தியடைவார்கள்.**

## அநீதிக்காக வைராக்கியமாக இருப்பது

**2-தெச-2:10 கெட்டுப்போகிறவர்களுக்குள்ளே அநீதியினால் உண்டாகும் சகலவித வஞ்சகத்தோடிருக்கும். 2-கொரி-6:14 அந்நிய நுகத்திலே அவிசுவாசிகளுடன் பிணைக்கப்படாதிருப்பீர்களா. நீதிக்கும் அநீதிக்கும் சம்பந்தமேது? ஒளிக்கும் இருளுக்கும் ஐக்கியமேது?**

**அநீதி என்பது தேவனுக்கு விரோதமான காரியம் அதனால் நாம் அதற்கு இசைந்திருக்ககூடாது.**

## தேவன் மேல் கொள்ளும் பக்தி வைராக்கியம்.

தாவீது தேவன் மேல் எந்த அளவுக்கு அன்பு வைத்தான் என்பதை வேதத்தை வாசிக்கும் போது நாம் அறிந்து கொள்ள முடியும். காரணம் சில மீறுதலான காரியம் செய்த போதும் தேவன் அவனுக்கு இரங்கி அவன் மேல் மனதுருகினார். சங்கீ-69:9 உம்முடைய வீட்டைக்குறித்து உண்டான பக்தி வைராக்கியம் என்னை பட்சித்தது. உம்மை நிந்திக்கிறவர்களின் நிந்தனைகள் என் மேல் விழுந்தது.சங்கீ-119:139 என் சத்துருக்கள் உம்முடைய வசனங்களை மறந்தபடியால் என் பக்தி வைராக்கியம் என்னை பட்சிக்கிறது.

சாத்ராக் மேஷாக் ஆபத்நேகோ தானி-3:14 நேபுகாத்நேச்சார் அவர்களை நோக்கி சாத்ராக் மேஷாக் ஆபத்நேகோ என்பவர்களே நீங்கள் என் தேவனுக்கு ஆராதனை செய்யாமலும் நான் நிறுத்தின பொற்சிலையை பணிந்து கொள்ளாமலும் இருந்தது மெய்தானா?

கர்த்தர் மேல் கொண்ட பக்தி வைராக்கியத்தின் நிமித்தம் அவர்கள் ராஜாவுக்கு பிரதியுத்தரம் அளித்தார்கள். தானி-3:16 நேபுகாத்நேச்சாரே இந்த காரியத்தை குறித்து உமக்கு உத்தரவு சொல்ல எங்களுக்கு அவசியமில்லை. நாங்கள் ஆராதிக்கிற தேவன் எங்களை தப்புவிக்க வல்லவராயிருக்கிறார். அவர் எரிகிற அக்கினி சூளைக்கும் ராஜாவாகிய உம்முடைய கைக்கும் நீங்கலாக்கி விடுவிப்பார். விடுவிக்காமற் போனாலும் நாங்கள் உம்முடைய தேவனுக்கு ஆராதனை செய்வதுமில்லை நீர் நிறுத்தின பொற்சிலையை பணிந்து கொள்ளுவதுமில்லை என்கிறது ராஜாவாகிய உமக்கு தெரிந்திருக்ககடவது என்றார்கள்.

சிறிதளவு கூட பயமில்லாமல் பதட்டமில்லாமல் ராஜாவிற்கு அவர்கள் பதில் கொடுத்தார்கள். இவர்களின் பக்தி வைராக்கியத்தினால் ராஜா கர்த்தரை ஏற்றுக்கொண்டான்.

## அப்போஸ்தலனாகிய பவுல்

கலா-3:1 புத்தியில்லாத கலாத்தியரே நீங்கள் சத்தியத்திற்குக் கீழ்படியாமற் போகத்தக்கதாக உங்களை மயக்கினவன் யார்? 1-கொரி-16:9 ஏனெனில் இங்கே பெரிதும் அனுகூலமான கதவு எனக்குத் திறக்கப்பட்டிருக்கிறது. விரோதம் செய்கிறவர்களும் அநேகர் இருக்கிறார்கள்.

எத்தனை போராட்டங்கள், நிந்தனைகள், எதிர்ப்புகள், பரியாசங்கள், பசி,பட்டினி, நிர்வாணம், மரணத்துக்கேதுவான தீமை இப்படி அநேக காரியங்கள் பவுலின் வாழ்க்கையில் வந்தாலும் அவர் கிறிஸ்துவின் மேல் அவரின் பக்தி வைராக்கியம் இவையெல்லாவற்றிலுமிருந்து பவுலை பாதுகாத்தது. ரோம–8:36 கிறிஸ்துவின் அன்பை விட்டு நம்மை பிரிப்பவன் யார்? உபத்திரவமோ,வியாகுலமோ,துன்பமோ,பசியோ,நிர்வாணமோ, நாசமோசமோ, பட்டயமோ?

2–தீமோ–4:7 நல்ல போராட்டத்தை போராடினேன் ஓட்டத்தை முடித்தேன் விசுவாசத்தை காத்துக்கொண்டேன்.

பிரியமானவர்களே, இப்படி நாமும் கர்த்தருக்காக பக்தி வைராக்கியமாக வாழ வேண்டும். அதற்காகவே நாம் அழைக்கப்பட்டோம். அதற்காகவே தேவன் நம்மை பாவம் என்னும் உளையான சேற்றிலிருந்து தம்முடைய இரத்தத்தை சிந்தி நம்மை மீட்டெடுத்திருக்கிறார்.

பக்தி வைராக்கியமாய் இருப்பவர்களுக்கு கர்த்தர் கொடுக்கும் வாக்குத் தத்தம் எண்ணா–25:12,13 ஆகையால் இதோ அவனுக்கு என் சமாதானத்தின் உடன்படிக்கையை கட்டளையிடுகிறேன். அவன் தன் தேவனுக்காக பக்தி வைராக்கியம் காண்பித்து இஸ்ரவேல் புத்திரருக்காக பாவ நிவிர்த்தி செய்தபடியினால் அவனுக்கும் அவனுக்கு பின்பு அவன் சந்ததிக்கும் நித்திய ஆசாரிய பட்டத்துக்குரிய உடன்படிக்கை உண்டாயிருக்கும் என்று சொல் என்றார்.

இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் உங்களை வாழ்த்துகிறேன்.
அவர் பெருகவும் நான் சிறுகவும் வேண்டும்.

இப்படிக்கு

கர்த்தரின் பணியில்
உங்கள் அன்பு சகோதரன்

கிறிஸ்துவுக்குள் அன்பு சகோதர சகோதரிகளுக்கு !
தாங்கள் இந்திய தேச மிஷினரிகளை தாங்கும் ஊழியத்திற்கான, தங்களது காணிக்கைகளை சகோ.கிறிஸ்டோபர் அவர்களிடத்திலும். திக்கற்ற பிள்ளைகளின் ஊழியத்திற்கான, தங்களது காணிக்கைகளை சகோ.பிராங்ளின் அவர்களிடத்திலும். வாகன ஊழியத்திற்கான, தங்களது காணிக்கைகளை சகோ.கிரண் அவர்களிடத்திலும், கொடுக்குமாறு கேட்டு கொள்கிறோம்.

## வாலிபர் பகுதி

**"ஒருவனுடைய வழிகள் கர்த்தருக்கு பிரியமாயிருந்தால் அவனுடைய சத்துருக்களும் அவனோடே சமாதானமாகும்படி செய்வார்கள்" நீதி-16:7**

கிறிஸ்துவுக்குள் பிரியமான அன்பு வாலிப சகோதர சகோதரிகளே, உங்கள் யாவருக்கும் என் அன்பின் வாழ்த்துக்கள். இந்த இதழ் வழியாக உங்களை சந்திப்பதில் மிக்க மகிழ்ச்சியடைகிறேன்.

பொதுவாக கிறிஸ்தவ வாழ்க்கையில் அதாவது கிறிஜ்துவோடு கூடிய வாழ்க்கையில் நாம் அதிகமாக நெருங்கும் போது இந்த உலகம் நம்மை பகைக்கும். நம்மை பகைக்கிறவர்களும் அநேகர் எழும்புவர். எல்லா பக்கத்திலிருந்தும் நம்மை நெருக்குவார்கள். ஆனால் இதற்கு மத்தியிலும் நாம் பரம அழைப்பின் பந்தைய பொருளுக்காய் இலக்கை நோக்கி ஓடிக்கொண்டிருக்கிறோம்.

பரிசுத்த வேதாகமத்தில் இப்படியாய் கிறிஸ்துவுக்கு பிரியமாய் பிதா மகிமைப்படும்படியாக உலகத்தால் கறைபடியாதபடிக்கு பரிசுத்தமாய் வாழ்ந்ததன் நிமித்தம் அநேக சத்துருக்களை சம்பாதித்த மனிதர் " யோசேப்பு"

ஒரு மனுஷனுக்கு சத்துருக்கள் அவன் வீட்டாரே மத்-10:36 வார்த்தையை போல தன் சொந்த சகோதரர்களால் பகைக்கப்பட்டு விற்று போடப்பட்டான். விற்கப்பட்ட இடத்திலும் வந்த மாமிச இச்சையிலும் விழாமல் தேவனுக்கு பிரியமாய் வாழ்ந்தான். ஆனாலும் இந்த உலகத்தின் நெருக்கம் அவனை விட்டு வைக்கவில்லை. சிறைபடுத்தப்பட்டான். இப்படியாக பல நிந்தைகளையும் அவமானங்களையும் சகித்துக்கொண்டு தேவனுக்கு பிரியமாய் வாழ்ந்து கொண்டிருந்தான். இதன் முடிவு எப்படியாயிருந்தது என்று ஆதியாகமம்புஸ்தகத்தில் வாசித்தோமென்றால் நன்றாய் அறிந்து கொள்ள முடியும். இப்படியாய் உலகத்தின் இச்சைக்கு விலகி ஓடி ஜெயித்ததின் மூலம் தேவன் அவனை ஆச்சரியமாய் உயர்த்தினார். எந்த இடத்தில் வெட்கப்பட்டு அவமானப்படுத்தப்பட்டு வேண்டாம் என்று ஒதுக்கப்பட்டானோ அதே மனிதர்கள் அவரிடத்தில் உதவி கேட்கும்படியாய் தேவன் உயர்த்தி அவரோடே சமாதானமாகும்படி செய்தார். தேவனோடு நீங்கள் நெருங்கி பழகும்போது அவருக்கு பிடித்தவிதமாய் நீங்கள் வாழும்போது இந்த உலகம் உங்களை பகைத்தால்,

"உலகம் உங்களை பகைத்தால் அது உங்களை பகைக்கிறதற்குமுன்னே என்னை பகைத்ததென்று அறியுங்கள்" யோவா-15:18 என்று வசனம் கூறுகிறது. இந்த உலகத்தை நாம் ஜெயிக்க பிறந்தவர்கள். இந்த உலகம் தேவனோடு கூட நாம் நெருங்கவிடாதபடி பலவிதமான காரியங்களை கொண்டு வந்து நம்மை முடக்கிவிட நினைக்கும். ஆனாலும் நம்முடைய இருதயத்தை காத்துக்கொண்டு ஓடிக்கொண்டேஇருப்போம்.

**வாலிபம் இயேசுவுக்கே...**

" உன் பேரை பெருமைப்படுத்துவேன் நீ ஆசீர்வாதமாய் "
( ஆதி -12:2 )

## இந்த மாதம் பிறந்த நாளை சிறப்பிக்கிறவர்கள்

சகோ.வர்கீஸ்
செல்வி.ஜியோபி ஷம்மா
இயேசு ரத்தினம்
சகோ.கண்ணன்
சகோதரி.ராணி ராமமூர்த்தி
சகோ.எபினேசர்
செல்வி.யாழினி ஜெகன்நாதன்
செல்வி.மகிழினி ஜெகன்நாதன்
செல்வி ஷாரோன் கிரேஸ் எபினேசர்
சகோ.பிரவீன்
சகோதரி.கீதா சகாய மேரி
சகோ.வேலு ராமர்

சகோதரி.நீலாவதி ஆசீர்வாதம்
சகோ.இம்மானுவேல் ஸ்டீபன்
செல்வி.கேரன் பெபிட் செல்பின்
சகோதரி.மெர்லின் ஜோன்ஸ்
சகோதரி.ஜாய்ஷகினா
சகோதரி.எப்சிபா பியூலா
சகோதரி.இவ்லின் சுனிதா
சகோதரி.ஜேரன் டேனியேல்
சகோதரி.நகோமி ஜான்சன்
சகோதரி.பிரிசில்லா ஆமோஸ்
சகோதரி.சரன்யா சத்தீஷ்
செல்வி.கிறிஸ்துராணி ஆசீர்வாதம்

## இந்த மாதம் திருமண நாளை சிறப்பிக்கிறவர்கள்

கர்த்தர் உனக்கும் உன் இளவயதின் மனைவிக்கும் சாட்சியாயிருக்கிறார் (மல்கியா 2:14)

திருமதி.திரு. ஜெகன்நாதன்
திருமதி.திரு. ஆரோக்கியதாஸ்
திருமதி.திரு. பீட்டர் ராமச்சந்திரன்
திரு.திருமதி. ஹெலன் ஷீஜா
திருமதி.திரு. ஜெகன்

திருமதி.திரு. ஆண்டனி சாமி
திருமதி.திரு. ஞானசேகர்
திருமதி.திரு. ராஜவேல்
திருமதி.திரு. கண்ணன்

# 2024 – பிப்ரவரி மாத நிகழ்ச்சி நிரல்

## ஞாயிறு ஆராதனை மாலை 5:00 முதல் 6:30 வரை

| நாள் | ஆராதனை | செய்தி |
|---|---|---|
| 04/2 /2024 | சகோ.சுகுமார் | சகோ.ஸ்டாலின் |
| 11/2 /2024 | சகோ. பக்த ராஜ் | சகோ. பிரசாத் |
| 18/2 /2024 | சகோ. சாம் சுந்தர் | சகோ. M.கிறிஸ்டோபர் |
| 25/2 /2024 | சகோ.சுபின் சிங் | சகோ. தாமஸ் |

## வெள்ளி ஆராதனை மாலை 4:00 முதல் 6:00 வரை

| நாள் | ஆராதனை | செய்தி |
|---|---|---|
| 02/2 /2024 | சகோ.டேவிட் | சகோ.ஸ்டாலின் |
| 09/2 /2024 | சகோ.ரவிஜான் பீட்டர் | சகோ.சாமுவேல் தாசையா |
| 16/2 /2024 | உபவாச திருவிருந்து ஆராதனை | |
| 23/2 /2024 | சகோ. ஜோசப் | சகோ. பிராங்க்ளின் |

**7/2/2024 அன்று சகோதரிகள் ஐக்கிய கூடுகை**

இடம் – பாஹீலில் உள்ள ஜெப வீடு

நேரம் – மாலை 6:30 முதல் இரவு 8:00 மணிவரை

வேத வினா பகுதி – வேதாகமத்திலிருந்து பொதுவான கேள்விகள்

**8/2/2024 அன்று முழு இரவு ஜெபம் ஆராதனை**

இடம் – பாஹீலில் உள்ள ஜெப வீடு

நேரம்– இரவு 10:00 முதல் அதிகாலை 1:00 மணிவரை

**14/2/2024 அன்று சாம்பல் புதன் ஆராதனை**

இடம் – பாஹீலில் உள்ள ஜெப வீடு

நேரம் – மாலை 6:30 முதல் இரவு 8:30 மணிவரை

**23/2/2024 அன்று வாலிபர் ஐக்கிய கூடுகை**


இடம் – பாஹீலில் உள்ள ஜெப வீடு

நேரம் - மாலை 6:30 முதல் இரவு 8:30 மணிவரை

வேத வினா பகுதி - யோபு

# 2024 பிப்ரவரி மாதத்திற்கான வேத வினா!

**கீழ் கண்ட கேள்விகளுக்கு சரியான பதிலை வசனம் மற்றும் அதிகாரத்துடன் குறிப்பிடவேண்டும்**



1. பிரமியமுள்ளவன் தொட்ட எது தண்ணீரால் கழுவபட வேண்டும்?
2.பிரமியமுள்ளவன் சுத்தமானபின் எத்தனை நாள் எண்ணிக் கொள்ளவேண்டும் ?
3. ஆரோன் சர்வாங்க தகனபலிக்காக சபையிடம் எவைகளை வாங்க வேண்டும் ?
4.ஆரோன் இரத்தத்தினால் எவைகளுக்காக பிராயசித்தம் செய்ய வேண்டும் ?
5.இஸ்ரவேலர் வெளியில் பலியிடுகிறவைகளை எங்கே பலியிட வேண்டும் ?
6.மனைவி உயிரோடிருக்கும் போது யாரை விவாகம் பண்ண கூடாது ?
7.பயிரை அறுக்கும்போது எவைகளை பொறுக்ககூடாது ?
8. எதில் அநியாயம் செய்ய கூடாது?
9. அபிஷேகம் பெற்ற ஆசாரியன் காளையின் இரத்தத்தில் கொஞ்சம் எங்கே தெளிக்க வேண்டும்?
10. பாவ நிவாரண பலிக்கான காளையின் எவ்வுறுப்புகளை சுட்டெரிக்க வேண்டும்? ?
11. பரிசுத்தமானதிலே தான் செய்த தப்பிதத்தினால் உண்டான நஷ்டத்தை எப்படி செலுத்த வேண்டும் ?
12. செய்யத்தகாதென்று விலக்கபட்டதை செய்தவன் பாவநிவாரண–பலியாக எதை செலுத்த வேண்டும் ?
13. போஜன பலியை எப்படி பாகம் பண்ண கூடாது ?
14. எது சமைக்கபட்ட மண்பாண்டம் உடைக்கப்பட வேண்டும் ?
15. கர்த்தர் இஸ்ரவேலின் சமாதான பலிகளில், ஆரோனுக்கும் அவன் குமாரருக்கும் எதை கொடுத்தார்?

**விடைகளை வருகின்ற 20-02-2024க்குள் (WhatsApp #+91 8940523562) என்ற எண்ணுக்கு பெயருடன் குறிப்பிட்டு அனுப்பும்படி கேட்டுக் கொள்ளப்படுகிறீர்கள். வேதாகமத்தில்– "லேவியராகமம்" அதிகாரங்களில் இருந்து பதிலை கண்டுபிடிக்கவும்.**

– – –தேடுங்கள், அப்பொழுது கண்டடைவீர்கள்; –மத்தேயு 7:7

## 2024 - ஜனவரி மாத வேத வினாவுக்கு விடை

1.இளைஞரே,.. கீழ்படிந்து , தாழ்மையை அணிந்து. ( 1 பேதுரு 5:5)
2. கர்த்தர் ( யூதா 1:15)
3. அநீதியெல்லம், விக்கிரங்களுக்கு விலகி(யோவான் 4: 17 , 21)
4. பட்சபாதமில்லாதவர் ( 1 பேதுரு 1:17)
5. நமக்கு பாவமில்லையென்போமானால், சத்தியம் (1 யோவான் 7 : 8)
6. நாம் ஆசிர்வாதத்தை சுதந்தரிக்க ( 1 பேதுரு 3: 9 )
7.தேமேத்திரியு (3 யோவான் 12)
8. சகோதரனிடத்தில் அன்பு கூறாதவன் ((1 யோவான் 3: 14))
9. தீமை செய்கிறவன்(3 யோவான் 11)
10.பொய்யன் (1 யோவான் 4:20)
11.சோதனையினின்று இரட்சிக்கவும், அக்கிரமகாரருக்கு நியாயதீர்ப்பு நாளுக்காகவும் ( 1 பேதுரு 2: 9 )
12. அன்பு (2 யோவான் 6)
13. இடறுகிறார்கள் ( 1 பேதுரு 2: 8 )
14. ஆத்துமரட்சிப்பு ( 1 பேதுரு 1: 9 )
15. தன் சகோதரனை பகைக்கிறவன் (1 யோவான் 2:9)

## 2024- ஜனவரி மாத வேத வினாவுக்கு

## பதில் எழுதியவர்கள்

SIS. சுகந்தி தம்பு குமார்
SIS. நித்யா ஜோன்ஸ்
SIS. ஜெஸ்லட் வர்கீஸ்
SIS. ஜீனா சதீஸ்குமார்
SIS. அனிதா திவ்யராஜ்
SIS. பியூலா மெர்சி பால்
SIS. சாந்தி
BRO. எட்வின் சாம் ஞானதுரை
BRO. எபினேசர்

# சகோதரிகள் பகுதி

கர்த்தருடைய பரிசுத்த நாமம் மகிமைபடுவதாக. இந்த மாத இதழின் மூலம் உங்களை சந்திப்பதில் மகிழ்ச்சி அடைகிறேன்.

சங்கீ-119:92 " உமது வேதம் என் மனமகிழ்ச்சியாயிராதிருந்தால் என் துக்கத்தலே அழிந்து போயிருப்பேன்" என்ற வசனத்தை அடிப்படையாக கொண்டு நாம் வேதத்தில் இருந்து தியானிக்கலாம்.

ஆம், பிரியமானவர்களே நாம் அன்றாட வாழ்வில் அனேக பாடுகள், தேவைகள், வேதனைகள் மத்தியில் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். இதை எல்லாவற்றையும் கடந்து ஒரு ஜெயம் உள்ள வாழ்க்கை நாம் எப்படி வாழ வேண்டும் என்று நம் தேவன் நமக்கு கற்று தருகிறார்.

மேலே நாம் பார்த்த வசனத்தின் படி கர்த்தரை நாம் சார்ந்து வாழதிருந்தால் நம் துக்கத்திலே அழிந்து போயிருப்போம்.
ஆம் பிரியமானவர்களே, தாவீது கூறுகிறார். சங்கீ-119:49,50 " நீர் என்னை நம்பப்பண்ணின வசனத்தையை உமது அடியேனுக்காக நினைத்தருளும்" அதுவே என் சிறுமையில் எனக்கு ஆறுதல், உம்முடைய வாக்கு என்னை உயிர்ப்பித்தது"

சங்கீ-119:71 " நான் உபத்திரவப்பட்டது எனக்கு நல்லது அதினால் உமது பிரமாணங்களைக் கற்றுக்கொள்ளுகிறேன்"
நம்முடைய பாடுகள், தேவைகள், நிந்தைகள், அவமானங்கள் மத்தியில் நாம் யாரை தேடுகிறோம்? கர்த்தரையா? அல்லது மனிதனையா? என்று சிந்தித்து பார்க்க வேண்டும்.

சங்கீ-119:143 - இக்கட்டும் நெருக்கமும் என்னைப் பிடித்தது ஆனாலும் உம்முடைய கற்பனைகள் என் மனமகிழ்ச்சி என்று தாவீது கூறுகிறார்.
நாமும் நம்முடைய இக்கட்டான சூழ்நிலையில் கர்த்தருடைய வேதத்தை மாத்திரம் சார்ந்து வாழ வேண்டும் பிரியமானவர்களே. மனிதர்களின் ஆறுதலை தேடி போனால் அது நமக்கு ஏமாற்றமாய்தான் முடியும்.

சங்கீ-73:28- எனக்கோ தேவனை அண்டிக்கொண்டிருப்பதே நலம். கர்த்தருடைய வேதத்தை நாம் தியானிக்கும் போது அவருடைய பாதத்தில் அமரும் போது கிடைக்கும் சமாதானம், சந்தோஷம் வேறு எங்கும் கிடைக்காது. ஆம் கர்த்தருடைய பிள்ளைகளே நாம் கர்த்தரை மட்டும் அண்டிக்கொள்ள வேண்டும்.

இதை நன்றாய் அறிந்த யோபு கூறுகிறார். யோபு-32:12 " அவருடைய வாயின் வார்த்தைகளை எனக்கு வேண்டிய ஆகாரத்தைப் பார்க்கிலும் அதிகமாய்க் காத்துக்கொண்டேன்."

நாமும் சில பாடுகள், வேதனைகள் ஊடாக நாம் கடந்து செல்லும் போது இந்த பாடு எனக்கு ஏன் வந்தது என்று சொல்லாமல் இதன் மத்தியில் நான் கர்த்தரை மட்டுமே சார்ந்து கொள்ளுவேன் என்று உறுதி எடுக்க வேண்டும் பிரியமானவர்களே.

## கர்த்தரின் பாதத்தில் மரியாள்

லூக்-10:39-42 இந்த வசனங்களை நாம் தியானிக்கும் போது "மரியாள் கர்த்தருடைய வார்த்தைக்கு தவிர வேறு எதற்கும் அவள் முக்கியத்துவம் கொடுக்கவில்லை"

இந்த பகுதியில் கர்த்தரே சாட்சி கொடுக்கிறார். "மரியாள் தன்னை விட்டு எடுபடாத நல்ல பங்கை தெரிந்துகொண்டாள்" என்று.

இன்று நாமும் தம்மை நிதானித்து பார்க்கலாம் என் மகன், மகள் என்னை மட்டுமே அண்டிகொண்டிருக்கிறார்கள் என்று கர்த்தர் நம்மை குறித்து சாட்சி கொடுக்க முடியுமா?

## கர்த்தரின் பாதத்தில் தானியேல்

தானி-6:10, 6:10-22 இந்த பகுதிகளில் நாம் தியானிக்கும்போது தானியேல் இக்கட்டான சூழ்நிலையிலும் மூன்று வேளையும் கர்த்தரை தேடினான். ஆம் பிரியமானவர்களே நாம் எப்படி இருக்கிறோம் சின்ன கவலை சின்ன நெருக்கம் வந்ததும் வேத தியானிப்பு ஜெபம் இரண்டும் இல்லை. நம்மை நாம் ஆராய்ந்து பார்த்து கர்த்தரிடத்தில் திரும்புவோம். இயேசு கிறிஸ்துவின் வாழ்க்கைக் கூட நமக்கு ஒரு பாடமாக இருக்கிறது. அவர் மனிதனாய் பூமியில் அமருவதை பழக்கமாக கொண்டிருந்தார். தனியாக சென்று ஜெபித்தார் என்று அனேக இடங்களில் நாம் பார்க்கலாம். மத்-14:23 லூக்-6:12,

மற்றும் மாற்கு-1:35. ஆம் பிரியமானவர்களே நாமும் நம்முடைய எந்த சூழ்நிலையிலும் கர்த்தரை மட்டுமே சார்ந்து வாழ்வோம். அவருடைய வேத வசனங்களை தியானிப்போம். சாட்சியாய் வாழ்வோம். நித்திய ஜீவனை சுதந்தரித்துக்கொள்ளுவோம். ஆமென்.

கடைசியாக சங்கீ-2:12-ல் குமாரன் கோபங்கொள்ளாமலும் நீங்கள் வழியிலே அழியாமலும் இருக்கும்படிக்கு அவரை முத்தஞ்செய்யுங்கள். கொஞ்ச காலத்திலே அவருடைய கோபம் பற்றியெறியும். அவரை அண்டிக்கொள்ளுகிற யாவரும் பாக்கியவான்கள். நாமும் நம் ஜீவன் அழிந்து போகாதபடிக்கு கர்த்தரை சார்ந்து வாழ்வோம். கர்த்தருடைய நாமம் மட்டுமே மகிமைப்படுவதாக.

இப்படிக்கு
உங்கள் அன்பு சகோதரி.

# இவைகளினால் என்னையும் உயிர்ப்பியும்

மண்ணோடு ஒட்டிக்கொண்டிருக்கிற என் ஆத்துமாவை,உமது வசனத்தின்படி என்னை உயிர்ப்பியும் (சங் 119-25)

மாயையைப் பாராதப்படி நீர் என் கண்களை விலக்கி, உமது வழிகளில் என்னை உயர்ப்பியும்.(சங் 119-35)

இதோ, உம்முடைய கட்டளைகள்மேல் வாஞ்சையாயிருக்கிறேன்; உமது நீதியால் என்னை உயிர்ப்பியும். .(சங் 119-40)

உம்முடைய வாக்கின் சாட்சியைக் காத்து நடக்க.உமது கிருபையின்படியே என்னை உயிர்ப்பியும். (சங் 119-88)

நான் மிகவும் உபத்திரவப்படுகிறேன்; கர்த்தாவே, உம்முடைய வசனத்தின்படியே என்னை உயிர்ப்பியும். (சங் 119-107)


எனக்காக நீர் வழக்காடி என்னை மீட்டுக்கொள்ளும்; உம்முடைய வார்த்தையின்படியே என்னை உயிர்ப்பியும். (சங் 119-154)

கர்த்தாவே, உம்முடைய இரக்கங்கள் மிகுதியாயிருக்கிறது; உமது நியாயங்களின்படி என்னை உயிர்ப்பியும். (சங் 119-156)

இதோ, உம்முடைய கட்டளைகளை நேசிக்கிறேன்; கர்த்தாவே, உமது கிருபையின்படி என்னை உயிர்ப்பியும்.(சங் 119-159)

உங்கள் அன்பு சகோதரன்
ஆண்டனி

# Kids Corner




Jeevan Ashva




Shaya




Rithisha

## WORD SEARCH

Find the words in the list that are hidden in the puzzle

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| P | S | A | L | M | S | C | J | K | G |
| D | H | L | C | K | D | A | B | R | E |
| E | G | O | P | Q | S | B | I | J | N |
| S | U | E | W | A | T | R | A | E | E |
| R | Z | H | R | O | F | A | I | S | S |
| A | C | A | S | U | M | H | I | S | I |
| N | H | N | O | A | H | A | D | E | S |
| I | S | A | A | C | L | M | O | V | E |
| J | O | J | O | H | N | S | E | A | S |
| E | L | O | K | L | O | F | Y | V | E |
| S | E | U | C | E | S | T | H | E | R |
| U | G | E | K | N | S | E | I | S | O |
| S | B | E | U | E | C | M | D | K | L |

| | | | |
|---|---|---|---|
| | ABRAHAM | GENESIS | NOAH |
| JESUS | SARAH | ESTHER | PSALMS |
| | ISAAC | JOHN | LUKE |


Answer Will Be Next Month

By

Stena Stalin Sunil

# கடந்த மாத கழ்வுகள் தங்கள் பார்வைக்கு சில















# ஊழியர்களுக்காக ஜெபியுங்கள்

## செயற்குழு உறுப்பினர்கள்

**சபை முதன்மை ஊழியர்**
**சகோ. S.ஸ்டாலின்**
66021072
96760452

**செயலாளர்**
**சகோ. S.சுகுமார்**
99837646

**பொருளாளர்**
**சகோ.டி. சிவக்குமார்**
97224276

**பெண்கள் ஐக்கிய தலைவி**
**சகோதரி . செலின் டேவிட்**
65967170
99368775

**வாலிப ஐக்கிய தலைவர்**
**சகோ. சுபின் சிங்**
65197164
65772762

Church Website Address - **ahmaditamilchurch.com**

Church 'E' mail ID - **ahmaditamil.kw@hotmail.com**

தங்களது ஜெப விண்ணப்பங்கள்
எதுவாக இருந்தாலும்
எங்களுக்கு தெரிவிக்கவும்
உங்களுக்காக ஜெபிக்க
ஒரு குழு ஆயத்தமாய் இருக்கிறது.

**Church Postel Address**

Your Name -

PO. Box No : 46795.

64018, Fahaheel - Kuwait

Private Circulation only